**தலைப்பு 274 - அனுராதபும் மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 274 அனுராதபும் மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபும் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அனுராதபும் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதி கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுராதபும் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நிநயாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானமற்ற பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திறைசேரி அச்சுப் பிரதிகள் மற்றும் ஏசீஐ 5 படிவத்தின் பிரகாரம் முன்னைய பெறுவனவுகள் ரூபா 74,874,530 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 103,266,952 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 28,392,422 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக இடம்பெற்றுள்ளது. | திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் உரிய பணத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### (ஆ) பிரதான பேரேட்டுச் செலவுகள்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான பேரேட்டுச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 67,653,680 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதியை ரூபா 105,794,116 ஆகக் காட்டியதன் காரணமாக பிரதான பேரேட்டுச் செலவுகள் ரூபா 38,140,436 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக இடம்பெற்றுள்ளது. | திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் உரிய பணத்தை நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

### (இ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஏயைன திணைக்களங்களினால் அனுராதபுரம் மாவட்டச் செயலகம் தொடர்பாக மேற்கொண்ட ரூபா 4,286,928 செலவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வழிகாட்டிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தரவுகள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

**(ஈ) மூலதனச் செலவுகள்**

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 05 மூலதனச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 199,956,036 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆனணி வேதனம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | ரூபா 199,956,036 தொகையில் மூலதனச் செலவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் ஆளணி வேதனம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் காட்டப்படவில்லை. | வழிகாட்டிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தரவுகள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

**(உ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியினை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 7.5 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் ஆண்டின் இறுதியிலுள்ள கட்டுநிதி மீதியானது கட்டுநிதி இணக்க கூற்றின் படியான மீதியினதும் ஆண்டின் இறுதியிலுள்ள கட்டுநிதி மீதியினதும் மொத்த தொகைக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 10,567,936 வித்தியாசமக இருந்தது. | தவறுதலாக இடம்பெற்றுள்ளது. | மீதிகளுக்கிடையிலான வித்தியாசம் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | கணிப்பீட்டின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களினால் பீ கணக்கிற்குச் செய்யப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 10,706,878 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதியை கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிணக்க கூற்றில் அப்பெறுமதி ரூபா 38,737,436 ஆக ரூபா 28,030,538 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iii) | கணிப்பீட்டின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களினால் பீ கணக்கிற்கு செய்யப்பட்ட வரவு வைத்தல்கள் ரூபா 584,500 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் அப்பெறுமதி ரூபா 39,520,000 ஆக ரூபா 38,935,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iv) | ஒன்றித்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனங்களால் முற்பணங்கள் பீ கணக்கிற்காகச் செய்யப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 39,520,000 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் அது ரூபா 10,855,021 ஆக ரூபா 28,664,979 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (v) | ஒன்றித்த பரீட்சை மீதியின் பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனங்களால் முற்பணங்கள், பீ கணக்கிற்காக செய்யப்பட்ட வரவு வைத்தல்கள் ரூபா 38,987,436 ஆக இருந்த போதிலும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் ரூபா 7,077,272 ஆக ரூபா 31,910,164 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (vi) | திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 7,767,350 ஆக இருந்த போதிலும் ACA 3 படிவத்தில் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் மீதியை காட்டும் | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

நிரலில் மற்றும் நிதி செயலாற்றல் கூற்றின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி நிரலில் அப்பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் பணமாகவும் செலவுகள் மூலமும் கட்டுநிதியை தீர்த்து வைத்தல்களின் மொத்தம் திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 5,637,849,213 ஆக இருந்த போதிலும் ACA 3 படிவத்தின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 5,645,581,089 ஆக இருந்ததனால் அந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 7,731,876 இணக்கமின்மை காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கருங்கல் தோண்டுவதற்கான அரசாங்க கட்டணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக வன பாதுகாப்பு நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தும் போது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் அகழ்தல் பணியகத்திற்கு அரசிறை செலுத்தப்பட்ட கருங்கற்கள் கியூப்களின் அளவுடன் | நிலுவையான கட்டணங்களை செலுத்துவது சம்பந்தமாக தொடர்ச்சியாக எழுத்துமூலம் தெரியப்படுத்துதல் இடம்பெற்றுள்ளதுடன் அறவீடு செய்தல்களுக்காக எதிர்காலத்தில் உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பணம் துரிதமாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பிடும் போது 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் கருங்கற்கள் அகழ்வதற்காக அறவிட வேண்டிய அரசாங்க கட்டணம் ரூபா 147,298,661 ஆகும். | | |
| (ஆ) | கிரவல் அகழ்வதற்காக அரசாங்க கட்டணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக வழங்கப்பட்ட 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2019 இலிருந்து 2022 வரையான ஆண்டுகள் தொடர்பாக கிரவல் அகழ்தல் இடம்பெற்று முடிவுறுத்தியுள்ள நபர்களினால் அகழ்வு செய்யப்பட்ட மொத்த கியூப்களின் அளவுக்குரிய அரசாங்க கட்டணமாக ரூபா 10,045,440 அறவீடு செய்யப்பட வேண்டி இருந்தது. | உரிய பணத்தை செலுத்துமாறு நபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் செலுத்தவில்லையாயின் அதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகப் பிரிவுகளில் வசித்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள காணியற்ற நபர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் தற்பொழுது காணிக்கு தகமையுள்ள எனினும் | நாட்டில் காணப்பட்ட பாதகமான நிலைமையின் காரணமாக காணிக் கச்சேரிகளை நடாத்துதல் குறைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் காணிக் கச்சேரிகளை நடாத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டரீதியான உரிமை இல்லாத நபர்களுக்கு முறைப்படியான அதிகாரப் பத்திரத்தினை வழங்குவதற்காக காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008.:.04 ஆம் இலக்க காணி முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலாளர்களால் காணிக் கச்சேரியினை நடாத்தி காணிகள் சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 03 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக 03 பிரதேச செயலகப் பிரிவுகளின் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணிக் கச்சேரிகள் நடாத்தப்படவில்லை. | | |
| (ஆ) | ஹபரண சுற்றுலா தகவல் நிலையத்திற்குத் தேவையான காணியை ஒப்படைக்கும் கட்டணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வடமத்திய பிரதம அமைச்சு செயலாளரினால் பளுகஸ்வெவ பிரதேச செயலகத்திற்கு கிடைத்த ரூபா 8,000,000 பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் தற்பொழுது காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின்'' 4 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணிகளை ஒப்படைப்பதனை துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கஹடகஸ்திகெலிய மற்றும் மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவுகளின் 287 நலன்பெறுனர்களுக்கு ரூபா 7,099,111 செலவு செய்து 21,261 கோழிக் | கஹடகஸ்திகெலிய பிரிவின் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் 78% ஆக இருந்ததுடன் | சாத்தியவள ஆய்வின் பின்னர் நலன்பெறுனர்களை சரியாக இனங்கண்டு நிபந்தனைகளுடன் |

| | | |
|---|---|---|
| குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 12,441 கோழிக் குஞ்சுகள் அல்லது 58% ஆனவை இறந்திருந்ததனால் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்கள் கிடைத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவில் 112 நலன் பெறுனர்கள் சந்தைக்கு முட்டைகளை விற்பனை செய்திருந்தார்கள். | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான காலத்தில் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு பிரதேச செலகத்தினதும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட 06 கடன் திட்டங்கள் தொடர்பாக 18 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,833,192 பணம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக நிலுவைக்கடனாக காணப்பட்டது. | இந்நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அறவிடப்படாத சில கடன்களை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதற்கு இலங்கை மகளிர் பணியகத்திற்கு வேண்டுதல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடனை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் கமத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் வதிவிட செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டுள்ள வெகுமதிப் பத்திர உரிமையாளர்களால் பல்வேறு கம்பனிகளுக்கு தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக அக்காணிகளில் ஒரு பகுதி வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களின் போது 2020 பெப்ரவரி 06 ஆந் திகதிய 2020/02 இலக்க கணி | உரிய வெகுமதிப் பத்திரங்களை அரசாங்கத்தினால் பெறுப்பேற்று சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கோவைகள் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றிக்கை எற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆணையாளர் நாயகத்தின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வெகுமதிப்பத்திரங்களின் பின்னைய செயற்பாடுகள் என்ற தலைப்பிலான சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய வெகுமதிப்பத்திரங்களை அரசாங்கத்தினால் பொறுப்பேற்று மேற்கூறிய சுற்றறிக்கையின் vi ஆம் பகுதியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் அவ்வாறான காணிகளில் காணப்பட்ட 126 தொலைத் தொடர்பு கோபுரங்கள் சம்பந்தமாக மேற்கூறிய சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சனாதிபதி அவர்களால் கையொப்பமிட்டு 03 பிரதேச செயலகங்களுககு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 1636 வெகுமதிப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு உரிய உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் வெகுமதிப் பத்திரங்கள் கிடைத்திருந்த காலப்பகுதி 01 ஆம் ஆண்டிற்கும் 14 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதாகும். | பணத்தை செலுத்துவதற்கு உள்ள சிக்கல்கள், காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காமை, தகவல்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாமை, பாதுகாப்பு வலயங்களில் அமைந்திருந்தமை, ஏனைய தரப்பினர்களால் பயன்படுகின்றமை, ஏனைய வெகுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமை, வெகுமதி பத்திரங்களுடனான காணியில் பயன்படுத்துபவர்கள் சிலர் வசிக்கின்றமை முதலிய விடயங்களின் காரணமாக வெகுமதிப்பத்திரங்களை தொடக்க உரிமையாளர்களுக்கு ஒப்படைத்தல் சிக்கலாக உள்ளது. | வெகுமதிப் பத்திரங்களை நலனாளிகளுக்கு துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நெல்லை கொள்வனவு செய்வதற்காக 2001 ஆம் ஆண்டிற்கும் 2006 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட | இலங்கை கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,485,983 பணத்திற்காக ஒரு | உரிய தரப்பினர்களிடமிருந்து பணத்தை அறவிட்டு திறைசேரிக்கு |

| | | |
|---|---|---|
| காலத்தில் திறைசேரியினால் வழங்கிய முற்பணங்களில் இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டிய மீதி ரூபா 32,247,247 ஆகும். | அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கும் கமநல மாவட்ட அலுவலகத்திற்குரிய ரூபா 2,120,000 தொகையினை பதிவழிப்பதற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டடுள்ளது. 02 கமநல அபிவிருத்திச் சபைகள் மற்றும் 03 பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்காக வழக்கு தாக்கல் செய்வதற்கும், நொச்சியாகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினை கலைத்ததன் பின்னர் அறவீடு செய்வதற்கும், எப்பாவல பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து ஒரு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. நல்லாட்ச்சி**

**4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் துரவில குளத்தின் வான்கதவுகளை தயார்படுத்தும் போது உள்ளடக்கபட்பட்ட காணிகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக நாச்சியாதீவு பிரதேச செயலகத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 613,721 பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டதுடன் உரிய நலன்பெறுனர்களுக்கு அந்த இழப்பீட்டினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துரவில வான் கதவுகளை தயார்படுத்தும் போது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு பிடித்துவைத்தல் பணம் போதியதாக இல்லாததனால் இரத்மலானை நீர் வழங்கல் சபையிடமிருந்து அதற்காக நிதி ஏற்பாடு வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. | இழப்பீட்டுப் பணத்தினை துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தில் மற்றும் 22 பிரதேச செயலகங்களில் சிரேஷ்ட மட்டத்தில் 25 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 27 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 34 வெற்றிடங்களும் மற்றும் இரண்டாம் மட்டத்தில் 37 மிகைகளும் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கிறேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |